மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 29 சனிக்கிழமை (13-1-2001) தொ. பேசி 3378 ஒலி: 25

லாலா சோப்
சன்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
நிக்சன் பல்பொருள் வாணிபம்
பஸ் நிலையம்
அச்சுவேலி
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

## ★ நோர்வே தூதுவர் எரிக்சோல் ஹெய்ம்

# புலிகளின் அரசியல் ஆலோசகருடன் கலந்தாலோசிக்க லண்டன் விரைவு

### சமாதான முயற்சியில் திருப்பம்

(கொழும்பு விசேட நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நடுநிலை ஏற்பாட்டாளராக செயற்பட்டு வரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர், மற்றும் தமிழ்த்தலைவர்களைச் சந்தித்துவிட்டு, அவர்களிடம் இருந்து கிடைத்த சில கோரிக்கைகளுடன் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நேரில் சந்திப்பதற்காக நேற்று அவசர அவசரமாக லண்டன் பயணமானார்.

இலங்கைஅரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நடுநிலை ஏற்பாட்டாளராக செயற்படும் எரிக்சோல் கடந்த 10ந் திகதி கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

இவர் கொழும்பில் தங்கியிருந்த கடந்த மூன்று நாட்களில் இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ண காந்தி, எதிர்கட்சித் தலைவர் ரணில் மற்றும் தமிழ் கட்சித் தலைவர்களையும் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சு நடாத்தியுள்

(8ஆம் பக்கம் பார்க்க)

### 71 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் ஆசிரியராக மேலும் 71 பேர்களின் பெயர் விபரம் வடக்குக் கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந் நியமனம் விஞ்ஞான மாணி, கலைமாணி, வர்த்தக மாணி ஆகிய பட்டதாரிகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. இப் பெயர்ப்பட்டியலை வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் விபரம் வருமாறு:

(7 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளை தோற்கடிக்க முடியாது அன்ரன் பாலசிங்கம் பேட்டி

[லண்டன்]

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியிலும், ஆளணி ரீதியிலும் பலமான நிலையில் இருப்பதனால் அவர்களை இலகுவில் தோற்கடிக்க முடியாது இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் லண்டன் ''தமிழ் கார்டியன்'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டு புலிகள் போரிட்டு வருகின்றனர். அண்மையில்

(8ஆம் பக்கம் பார்க்க)

### 14 சபைகளின் தலைவராக பிரபாகரன் இருக்கின்றார்

#### பாராளுமன்றில் அனுருத்த

(கொழும்பு)

பதின் நான்கு பிரதேச சபைகளின் தலைவராக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இருக்கிறார் அதனால் இப் பிரதேச சபைகளுக்கான தேர்தலை இப்போது நடத்த முடியாது

எரிபொருள் மின் சக்தி அமைச்சரும் பிரதிப் பாதுகாப்புஅமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்றுமுன்தினம் அவசரகால நிலையை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணையில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான்கு மாவட்டங்களிலுள்ள பிரதேச சபை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### யுத்தத்தை நிறுத்தக் கோருவதில் தவறு இல்லை

#### மனிதநேயஒன்றியம்அறிக்கை

[யாழ்ப்பாணம்]

தமிழ் மக்களின் அபிலாசை சுயநிர்ணய உரிமையே என்பதை வெளிப்படுத்தும் வகையில் யாழ் பல்கலைக்கழக சமூகம் அரசசார்பற்ற அமைப்புக்களும் முன்னெடுத்துள்ள ''பொங்கு தமிழ்'' மக்கள் எழுச்சி போருக்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

### வழக்கு 26ம் திகதிக்கு ஒத்திவைப்பு

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமரதுங்காவை கொலை செய்யும் நோக்கில் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு நீதி மன்றத்தில்நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதி மன்றத்தில் சாட்சிகளை ஆஜர் செய்யாமையால் மீண்டும் இம்மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (வ)

### ஓடும்பஸ்ஸில் பிரசவம் வடமராட்சியில் சம்பவம்

பிரசவத்திற்காக வடமராட்சி கிழக்கிலிருந்து பருத்தித்துறைஆதார வைத்தியசாலைக்கு பஸ்ஸில் பயணம் செய்து வந்த இளம் கர்ப்பிணிப்பெண் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ளார். மணற்காடு குடத்தனையைச் சேர்ந்த எட்மன்ராசா அமுதசீலி (வயது 24) என்னும் இளம் பெண்ணே குழந்தையை பிரசவித்தவராவார்.

வடமராட்சிகிழக்குப் பகுதியில்(8ஆம் பக்கம் பார்க்க)

### பொங்குதமிழ், நிகழ்வுக்கு அரசவைத்திய அதிகாரிகள் சங்கமும் முழுஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அபிலாசைகள் சுயநிர்ணயஉரிமையே என்பதைவெளிப்படுத்த யாழ் பல்கலைக்கழக சமூகமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்னெடுத்துள்ள ''பொங்கு தமிழ்' எழுச்சிப் போருக்கு தமதுமுழுமையான ஆதரவை வழங்குவதாக அரசாங்க வைத்தியஅதிகாரிகள் சங்கத்தின்யாழ்ப்பாணக்கிளை அறிவித்துள்ளது.

'பொங்குதமிழ் நிகழ்வைஆதரிக்கின்றோம்' என்ற தலைப்பில்அரசாங்கவைத்தியஅதிகாரிகள்சங்க யாழ் கிளைவெளி

(8ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு நீக்கம்

(யாழ்ப்பாணம்)

நாளை தைப்பொங்கலை முன்னிட்டு இன்று முழுநாளும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும் (ந)

### வன்னிப்பகுதியில் விமானக்குண்டு வீச்சு

(வவுனியா)

இலங்கைப்படையின் யுத்த விமானங்கள் வன்னிப் பகுதியில் பரவலாக குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன

நோர்வே பிரதிநிதி எரிக் சோல் ஹெய்ம் ஜனாதிபதி, பிரதமர், மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் தமிழ்த்தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்துவிட்டு லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்ற சில மணி நேரத்தின் பின் இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### அமெரிக்கத்தூதுவர் அஸ்லிவில் மீது கண்டி மகாநாயக்கர் பாய்ச்சல்

(கொழும்பு)

வரலாற்று ரீதியாக இலங்கை சிங்களமக்களுடையநாடு இதனை இல்லாதொழிக்க வெளிநாட்டு தலையீடுகள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவென்று கண்டி மல்வத்த மகாநாயக்க தேரர் ரம்புக்க சிறிவிபசி நாயக்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத்தூதுவர் அஸ்லிவில் கடந்தவியாழக்கிழமை தேரரைச் சந்தித்துகலந்துரையாடிய போது தமிழ்மக்களுக்கு நியாயமான கௌரவமான உரிமை இலங்கையில் காணப்படவில்லை என்று தெரிவித்தமைக்கு, மறுப்புத் தெரிவித்தபோதே தேரர் மேற்கண்டவாறு ஆவேசத்துடன் கூறினார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், வெளி நாட்டவர்களும், வெளிநாட்டு தூதுவர்களும் விரும்புவது போன்று இலங்கைமக்கள் வாழ முடியாது,

(8ஆம் பக்கம் பார்க்க)

### துன்னாலையில் மிதிவெடி

#### பாலகன் உட்பட மூவர் காயம்

(மந்திகை)

துன்னாலைப் பகுதியில் இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் மூன்று வயது பாலகன் உட்பட மூவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயப்பட்டவர்கள் ஆறு பிள்ளைகளின் தந்தையான

(8 ஆம் பக்கம் பார்க்க).

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம்மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.
(நேற்றைய தொடர்ச்சி)

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 169479 பி | 169559 ஏ |
| 169559 பி | 169644 ஏ |
| 169695 ஏ | 169695 பி |
| 169695 சி | 169695 டி |
| 169695 ஈ | 169792 ஏ |
| 169811 ஏ | 169812 ஏ |
| 169831 ஏ | 169835 ஏ |
| 169835 பி | 169881 ஏ |
| 172297 ஏ | 172308 ஏ |
| 172379 ஏ | 172463 ஏ |
| 172474 ஏ | 172474 பி |
| 172474 சி | 172618 ஏ |
| 174295 ஏ | 174295 பி |
| 174320 ஏ | 174354 ஏ |
| 174364 ஏ | 174393 ஏ |
| 174407 ஏ | 174436 ஏ |
| 174445 ஏ | 174472 ஏ |
| 176053 ஏ | 176053 பி |
| 176137 ஏ | 176137 பி |
| 176211 ஏ | 176211 பி |
| 176244 ஏ | 176294 ஏ |
| 176378 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 165769 ஏ | 165769 பி |
| 166906 ஏ | 166906 பி |
| 174811 ஏ | 174811 பி |
| 175190 ஏ | 175190 பி |
| 175191 ஏ | 176562 ஏ |
| 176630 ஏ | 176664 ஏ |
| 176664 பி | 176750 ஏ |
| 176750 பி | 176863 ஏ |
| 176863 பி | 176863 சி |
| 176863 டி | 176878 ஏ |
| 176894 ஏ | 176894 பி |
| 176912 ஏ | 176940 ஏ |
| 176940 பி | 176964 ஏ |
| 176990 ஏ | 176990 பி |
| 178514 ஏ | 178548 ஏ |
| 178565 ஏ | 178568 ஏ |
| 178933 ஏ | 178937 ஏ |
| 178937 பி | 178937 சி |
| 178944 ஏ | 178978 ஏ |
| 178978 பி | 178978 சி |
| 178993 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 146325 ஏ | 176603 ஏ |
| 176779 ஏ | 176779 பி |
| 176952 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 167616 ஏ | 174009 ஏ |
| 174055 ஏ | 174080 ஏ |
| 174096 ஏ | 174096 பி |
| 174096 சி | 174097 ஏ |
| 177022 ஏ | 177022 பி |
| 177058 ஏ | 177058 பி |
| 177058 சி | 177063 ஏ |
| 177063 பி | 177088 ஏ |
| 177212 ஏ | 177240 ஏ |
| 177240 பி | 177244 ஏ |
| 177244 பி | 161725 ஏ |
| 161725 பி | 168956 ஏ |
| 170373 ஏ | 174970 ஏ |
| 174971 ஏ | 174971 பி |
| 176517 ஏ | 176571 ஏ |
| 176571 பி | 176571 சி |
| 176633 ஏ | 176688 ஏ |
| 176700 ஏ | 176824 ஏ |
| 176824 பி | 176824 சி |
| 176824 டி | 176844 ஏ |
| 176844 பி | 176844 சி |
| 176853 ஏ | 176853 பி |
| 176853 சி | 176854 ஏ |
| 176966 ஏ | 178521 ஏ |
| 178521 பி | 178521 சி |
| 178521 டி | 178521 ஈ |
| 178563 ஏ | 178563 பி |
| 178584 ஏ | (ச) |

இம்மாதம் 11ம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 158938 ஏ | 172912 ஏ |
| 176632 ஏ | 176775 ஏ |
| 176841 ஏ | 176841 பி |
| 176841 சி | 176977 ஏ |
| 178921 ஏ | |
| 178950 ஏ | 178955 ஏ |
| 178955 பி | 178955 சி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 159091 ஏ | 166416 ஏ |
| 166416 பி | 166416 சி |
| 166416 டி | 168468 ஏ |
| 171817 ஏ | 171838 ஏ |
| 171838 பி | 173596 ஏ |
| | 173596 பி |
| 173609 ஏ | 173609 பி |
| 173698 ஏ | 173824 ஏ |
| 173824 பி | 174824 சி |
| 173824 டி | 175284 ஏ |
| 175284 பி | 175388 ஏ |
| 175388 பி | 175410 ஏ |
| 175415 ஏ | 175415 பி |
| 175415 சி | 175521 ஏ |
| 175565 ஏ | 175565 பி |
| 175589 ஏ | 175589 பி |
| 175665 ஏ | 175682 ஏ |
| 175682 ஏ | 175682 சி |
| 175682 டி | 175697 ஏ |
| 175710 ஏ | 175710 பி |
| 175710 சி | 175710 டி |
| 175710 ஈ | 178022 ஏ |
| 178079 ஏ | 178079 பி |
| 178079 சி | 178090 ஏ |
| 178090 பி | 178129 ஏ |
| 178135 ஏ | 178135 பி |
| 178137 ஏ | 178137 பி |
| 178144 ஏ | 178144 பி |
| 178144 சி | 178158 ஏ |
| 178166 ஏ | 178166 பி |
| 178209 ஏ | 178210 ஏ |
| 178265 ஏ | 177328 ஏ |
| 178328 பி | 178342 ஏ |
| 178346 ஏ | 178347 ஏ |
| 178358 ஏ | 178371 ஏ |
| 178371 பி | 178371 சி |
| 178371 டி | 178371 ஈ |
| 178371 எவ் | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 178065 ஏ | 178065 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 161023 ஏ | 161023 ஏ |
| 161023 சி | 16 930 ஏ |
| 161930 பி | 171642 ஏ |
| 171642 பி | 171642 சி |
| 171642 டி | 17 947 ஏ |
| 172021 ஏ | 172041 ஏ |
| 173627 ஏ | 173627 பி |
| 173627 சி | 173627 டி |
| 173829 ஏ | 173829 பி |
| 173829 சி | 173829 டி |
| 175215 ஏ | 175348 ஏ |
| 177348 பி | 175390 ஏ |
| 175390 பி | 185568 ஏ |
| 175568 பி | 175568 சி |
| 175612 ஏ | 175673 ஏ |
| 175673 பி | 178027 ஏ |
| 178083 ஏ | 178083 பி |
| 178088 ஏ | 178096 ஏ |
| 178096 பி | 178102 ஏ |
| 178103 ஏ | 178103 பி |
| 178151 ஏ | 178155 ஏ |
| 178155 பி | 178155 சி |
| 178164 ஏ | 178189 ஏ |
| 178200 ஏ | 178200 பி |
| 178200 சி | 178200 டி |
| 178240 ஏ | 178240 பி |
| 178252 ஏ | 176895 ஏ |
| 176933 ஏ | 176937 ஏ |
| 176937 பி | 176969 ஏ |
| 178525 ஏ | 178525 பி |
| 178526 ஏ | 178918 ஏ |
| 178930 ஏ | 178930 பி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 174943 ஏ | 174943 பி |
| 176876 ஏ | 176876 பி |
| 176876 சி | 176877 ஏ |
| 176877 பி | 176927 ஏ |
| 176968 ஏ | 178576 ஏ |
| 178576 பி | 178988 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 176885 ஏ | 178935 ஏ |
| 178935 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 172756 ஏ | 172756 பி |
| 172756 சி | 172756 டி |
| 174834 ஏ | 175803 ஏ |
| 175803 பி | 176755 ஏ |
| 176888 ஏ | 176888 பி |
| 176911 ஏ | 176920 ஏ |
| 177920 பி | 176922 ஏ |
| 176922 பி | 176935 ஏ |
| 176935 பி | 176986 ஏ |
| 176986 பி | 178537 ஏ |
| 178537 பி | 178537 சி |
| 178560 ஏ | 178882 பி |
| 178981 ஏ | 178981 பி |
| 178981 சி | 177981 டி |
| 178982 ஏ | 178992 ஏ |
| 178992 சி | (ச) |

# இராசி பலன்

13-1-2001
(மார்கழி 29, சனி
சதுர்த்தி மாலை 6 01 வரை
மகம் மு ப 11 01 வரை
ராகு காலம் 9 33 - 11.03
சுபநேரம் 3 33 - 5 03
அமிர்தசித்தம்
சங்கடகர சதுர்த்தி

**மேடம்**
குடும்பக் கவலை, உடல் உபாதை, காரிய தாமதம், நிலைமாற்றம்.

**இடபம்**
உறவினர் வெறுப்பு, அதிகாரிகள் விவதாதம், பயந் சுவாவம், முயற்சி தாமதம்

**மிதுனம்**
தனலாபம், வாக்கு மேன்மை, சகோதரர் உதவி, காரியம் கைகூடும்.

**கடகம்**
மதிப்புக் குறைவு காரிய தாமதம், தனவிரயம், வீண் கலகம்

**சிங்கம்**
முயற்சி ஜெயம், ஜனவசியம், போசன சுகம், தேக சுகம்.

**கன்னி**
பணவிரயம், அமைதியின்மை, காரிய தாமதம், ரோசம்.

**துலாம்**
நிலைக் கேடு, தொழில் நன்மை, தனலாபம், சந்தோசமான நிலை.

**விருச்சிகம்**
மனக்கவலை, தொழில் மேன்மை, அதிகாரம், முயற்சி கைகூடும்.

**தனுசு**
பிரயாணம், வயிற்றுக் கோளாறு, கட்டுப்பாடு, உஷ்ண ரோகம்.

**மகரம்**
பிரயாண பயம், வியாதி ஏற்படல், காரியத் தடை, அபகீர்த்தி

**கும்பம்**
உல்லாசம், விருந்துபசாரம், நண்பர்கள் சந்திப்பு, காரிய ஜெயம்.

**மீனம்**
முயற்சி பலிதம், சந்தோசமான நிகழ்வு, பகைவர் விலகுவர், புதிய முயற்சி.

— வளவன்

வலி கிழக்கு பிரதேசசபை நீர்வேலி

## கேள்வி அறிவித்தல் -2001

### உரும்பிராய் மத்திய சந்தைக் கட்டிடத்தில் அமைந்துள்ள 01ம், 02ம், 03ம், இலக்க உட்புற கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமம்

2000ம் ஆண்டிலிருந்து எமது சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் உரும்பிராய் மத்திய சந்தை இயங்குகிறது என்பதை பொதுமக்கள் கவனத்திற்கு அறியத் தருகின்றேன். மேற்படி சந்தைக்கு ஒருமைல் சுற்றாடலில்எவ்விடத்திலும்மரக்கறிமீன்வியாபாரம்செய்வது அனுமதிக்சப்பட மாட்டாது என்பதையும் பொதுமக்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றேன்.

01. உரும்பிராய் மத்திய சந்தையில் அமைந்துள்ள 03 உட்புற கடைகளிலும் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கை பிரஜைகளிடமிருந்து 19-01-2001ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 2-00 மணியளவில் திறந்து பரிசீலிக்கப்படும்.
02. கேள்விப் பத்திரங்கள் 18-01-2001ம் திக பிற்பகல் 2-00 மணிவரை கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 150/-ம் மீளளிப்புச் செய்யப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 2000/-ம் செலுத்துபவர்களுக்கே வழங்கப்படும்.
03. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக 'தலைவர், வலி கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி' என முகவரியிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல்மூலையில் எத்தனையாம் இலக்கக் கடைக்கான கேள்வி எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இச்சபையின் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடுதல் வேண்டும்.
04. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வி அடிப்படையில் வழங்கப்படும்.
05. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் கடையைப் பொறுப்பேற்காதுவிடின் அவரது கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
06. ஒருவர் ஒருகேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
07. மேற்படி கடைகளில் கீழ்வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
    01. தேனீர்க் கடை / சாப்பாட்டுக்கடை
    02. மீன்/ இறைச்சி, மரக்கறிவகை/மதுபானம் விற்பனை செய்தல்.
08. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
09. ஒவ்வொரு கடையின் ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூபா 50000/-
10. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

**ப.குணசிங்கம்,**
ஜே. பி. யூ. எம்,
தவிசாளர்
வலி கிழக்கு பிரதேசசபை
நீர்வேலி.

வலிகிழக்கு பிரதேசசபை
தலைமை அலுவலகம்,
நீர்வேலி
12-01-2001
(கி/1325)


சபரிமலை ஐயப்பனின்

## மகரஜோதிப் பெருவிழா

தைமாதப் பிறப்பன்று (14-01-2001) பி.ப 2-00 மணிக்கு பஜனை ஆரம்பமாகும்.

பஜனை: **இந்துதாசன் குழுவினர், தாவடி.**

இடம்: **கதிரேசன் கோவில், யாழ்ப்பாணம்.**

3-00 மணிக்கு சாஸ்தா பூஜை சஹஸ்ரநாம அர்ச்சனை நடைபெறும்.

ஐயப்ப பக்தர்கள் திரளாகக் கலந்து ஆசிபெறுமாறு வேண்டப்படுகின்றனர்.

பிரதமகுரு: **சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்.**

இங்ஙனம்
**சிவஸ்ரீ இ. வைத்தீஸ்வரக் குருக்கள்.**
கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (2411)



யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன்
காணாமல் போனோரின் குடும்பங்களினது சிறார்களின் துயர்துடைப்பிற்காக
யாழ். முன்னணி இசைக்கலைஞர்களுடன்
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து வழங்கும்

## கலைக்குயில் கானங்கள் இசைவிருந்து

இடம்: அச்சுவேலி மகாவித்தியாலயம் (லாலா சோப் அரங்கில்)
காலம்: 14.01.2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.30 (புதிய நேரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நுழைவாயிலில் உங்கள் ரிக்கற்றை பெறவும்

கலைப்பீட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.

(விளம்பர அன்பளிப்பு: லாலா சோப்) (1324)

## நான் வளர்த்த குழந்தையின் சடலத்தை

# என் கையால் புதைகுழியில் மூடிய சம்பவம்

# வாழ்வில் என்றுமே மறக்க முடியாது

## யுத்தகளத்திலிருந்து மீண்டு வந்தவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

நாம் தூக்கி வளர்த்த இரண்டு வயதுப் பாலகி ஷெல் தாக்குதலினால் மரணமடைந்த வேளையில் இறுதிச் சடங்குகளைக் கூடச் செய்ய வழியின்றி அகப்பட்ட மரச்சளை சடலத்தின் மேல் வைத்து கண்ணீர்விட்டவாறு நான் வெட்டிய புதைகுழியில் என்கையாலேயே அச் சிறுமியை புதைத்த செயல் மிக மிக வேதனையானது. யாருடைய வாழ்விலும் இது போன்ற அவலங்கள் ஏற்படக் கூடாது

கடந்த வருடம் 28 ஆம் திகதி 5ம் மாதப் படும்ஷெல் மழையிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பிவந்த மட்டுவில் தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய அரச ஊழியர் சேனாதிராசா கண்ணீர் மல்கிய நிலையில் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

துன்ப அலைகளால் கனத்த இதயத்துடன் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தொடர்கையில்;

விடுதலைப் புலிகள் தென்மராட்சிப்பகுதியில் யுத்தம் ஆரம்பித்த ஓரிருதினங்களில் எமது பகுதி மீது முதலாவது ஷெல் வந்து வீழ்ந்தது.

தொடர்ந்து ஷெல்கள் பாய சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தவண்ணம்இருந்தன. அகப்பட்டதை எடுத்தவாறு எமது அயலவர்கள் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடிய வண்ணம் இருந்தனர்.

இதற்கிடையில் யுத்தப் பிரதேசத்திலிருந்து மக்களை வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர். நாம் வளர்ந்த தாயகத்தை விட்டு அனாதையாக வெளியேற எமக்கு மனசு வரவில்லை. எனவே அங்கு தொடர்ந்து தங்கினோம்.

ஆனாலும் தொடர்ந்து எமது வீட்டு வளவுப் பகுதியில் வீழ்ந்த ஷெல்கள் எமது வீட்டிலும் வீழ்ந்தன. வீடு பலத்த சேதமடைந்தது.

அவசர அவசரமாக பங்கர் ஒன்று அமைத்து அதற்குள் தங்கினோம் ஒழுங்காக சாப்பிடக்கூட முடியாத நிலை.

சமைத்தஉணவைகோப்பைக்குள் போட்டபடி பங்கருக்குள் இருந்து உண்ண முயன்ற போது ஷெல்கள் வீழ்ந்து வெடித்த போது ஏற்பட்ட மண்துகள்கள்கோப்பைக்குள் வந்து வீழ்ந்து எம்மை சாப்பிட முடியாமல் செய்து விட்டன இப்படி அனேக சம்பவங்கள் வார்த்தையால் விபரிக்க முடியாது.

இச்சம்பவத்தின் போது பங்கரை விட்டு வெளியேறியஎமது நெருங்கிய உறவுடைய நடுத்தர வயதுப் பெண் ஒருவர் வலதுகால் துண்டிக்கப்பட்ட நிலையில் குறண்டிய படி வீட்டின் ஒரு மூலையில் இறந்து கிடந்தார்.

மற்றையவர் வயிறு பிளந்த நிலையில் இறந்தார். இரண்டு வயது பாலகி உட்பட மூவரின் சடலங்களையும் ஒரே கிடங்கில் போட்டு மூடினேன். அயலில் உள்ள ஒரு இளைஞன் மட்டும் இதற்கு உதவி செய்தார்.

இது விடயம் சம்பந்தமாக அங்கு நடமாடிய இளைஞர்களிடம் உதவி கோரிய போது உது எங்கள் வேலையல்ல. மிகப்பெரிய வேலை எங்களுக்கு உள்ளது என்று முகத்திலடித்தாற்போல் கூறினர்

குறிப்பிட்ட யுத்தப் பகுதியை விட்டு வெளியேறுவதற்கு நாம் எட்டுத்தினங்கள் முயற்சித்தும் கூட அம்முயற்சி நிறைவேறவில்லை.

ஷெல்களிற்கு நெருங்கிய உறவுகளை பறிகொடுத்து சாப்பாட்டிற்கு வழியின்றி அலைந்து திரிந்த வேளை கூட எமக்கு மனிதாபிமான உதவிகள் எவையும் கூட கிடைக்கவில்லையென மிக மனத்தாங்கலுடன் தெரிவித்தார்.

ஒருவாறு பல சிரமங்களின் மத்தியில் யாழ்ப்பாணத்தை அடைந்தோம். ஓய்வூதியப்பணத்தின் மூலம் மூன்று வேளையாவது நிம்மதியாக சாப்பிடமுடிகிறது என்றார். (க-12)

## ஊர்காவற்றுறையில்

# இரவு வேளைகளில் திடீர் மின்வெட்டு

(ஊர்காவற்றுறை)

வேலணை பேற்குப் பகுதியில் இரவு நேர மின்சாரம் திடீர் திடீரெனத் துண்டிக்கப்படுகிறது

இவ்வாறு திடீரென மின்சாரத் துண்டிக்கும் செயலில் விசமத்தனம் மிக்க இளைஞர் குழுக்கள் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனால், மின்சார உபகரணங்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டிகள் என்பன செயலிழந்து போவதாக பொதுமக்கள்விசனப்தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மின்சார சபையினர்க்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும் தொடர்ந்தும் இச்சம்பவம் இடம் பெறுகின்றதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-75)

# காவலூரில் ஐயாயிரம் கொடுப்பனவு விரைவில்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோர் கொடுப்பனவான ஐயாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

காரைநகரைச் சேர்ந்த 29 குடும்பங்களுக்கும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 28 குடும்பங்களுக்குமே இம் மீளக்குடியமர்வுக்குரிய காசோலை அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அண்மையில் இப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்தவர்கள் தங்கள் பகுதிக் கிராம சேவகருடன் தொடர்பு கொண்டு பெயரினை உறுதிப்படுத்திய பின்னர் வங்கியில் சென்று பணத்தினைப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் இப்பகுதி உதவி அரச அதிபர் பிரிவில் அசையும் அசையாச் சொத்துக்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக ரூபா பத்தாயிரம் வழங்கப்பட்டுள்ளது.

காரைநகர் மருதபுரம் ஜே-40 கிராமசேவகர் பிரிவில் வசிக்கும் 16 பேருக்கு அசையும் அசையாச் சொத்துக்களுக்கான இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

வீடு புனரமைப்பிற்கான முதலாம் கட்டக் கொடுப்பனவினைப் பெற்றுக் கொண்டவர்களுக்கே மேற்படி கொடுப்பனவாக ரூபா பத்தாயிரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-75)

## யாழ். குடாநாட்டின் கிழக்கில்

# செயற்பாடற்ற நிலையில் சனசமூக நிலையங்கள்

(ஈச்சமோட்டை)

கடந்தகாலத்தில் யாழ்ப்பாணத்தின் அசாதாரண சூழ்நிலைகளால் பல வாசிகசாலைகள் மற்றுப் சழசங்கள் என்பனவற்றின் செயற்பாடுகள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

யாழ். குடாநாட்டின் கிழக்கு பகுதியான கொய்யாத் தோட்டம், ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, சச்சேரியடி போன்ற பகுதிகளில் உள்ள வாசிகசாலைகள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் மாதர் சங்கங்கள் என்பன செயற்பாடுகள் எதுவுமற்ற நிலையில் காணப்படுகின்றன.

மேற்படி பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் மீளவும் அசாதாரண சூழ் நிலைகள் ஏற்படுமோ என்ற ஐயம் காரணமாகவே, இத்தகைய நிலையங்கள் தமது செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிப்பதில் தயக்கம் காட்டுகின்றன.

இது கிராமரீதியான பல ஆக்கபூர்வமான செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை எய்துவதற்கு ஏதுவாக அமையலாம் என அப்பகுதி வாசிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனவே இப்பகுதி வாழ் மக்கள் ஒன்றுபட்டு உழைப்பதற்கும் கிராம வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும் சாதகமான சூழல் ஒன்று உருவாகுமிடத்து இந் நிலையங்கள் தமது சேவைகளை ஆற்றப் பின் நிற்காது என்பதில் ஐயமில்லை. (ச-59)

## வணிகர்களுக்கான

# மரணக் கொடுப்பனவு மீண்டும் வழங்கல்

(துன்னாலை)

தென்மராட்சி, சாவகச்சேரி கைத் தொழிலாளர் வணிக மன்ற அங்கத்தவர்களுக்கான மரணக் கொடுப்பனவு மீண்டும் வழங்கப்படுகிறது.

தென்மராட்சியில்இருக்கும் போது வழங்கப்பட்டு வந்த மேற்படி கொடுப்பனவு இடப்பெயர்வின் காரணமாக சில காலம் வழங்கப்படாது தடைப்பட்டிருந்தது.

தற்போது இந் நடைமுறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வணிகர் மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார். (ச-41)

## எல்லையால் வந்த தொல்லை

(யாழ்ப்பாணம்)

தோட்டத்தில்வரம்பு கட்ட முற்பட்ட வேளையில் இடம் பெற்ற எல்லைத்தகராறில் தலையில் காயமடைந்த நிலையில் அப்புலிங்கம் முகுந்தன் (வயது 21) என்பவர் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-104)

## ஆளுநர் நியமனம்

[கொழும்பு]

முன்னாள் சபாநாயகர் கே. பி. இரத்நாயக்கா மத்திய மாகாண ஆளுனராக நியமிக்கப்பட்டதாக அரச செய்திகள் நேற்று தெரிவித்தன. (க)

## சகல கட்சிகளும்

# இனப்பிரச்சினை குறித்து ஒருமித்த முடிவிற்கு வரவேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் வேண்டுகோள்

(கொழும்பு)

பிரதான கட்சிகள் தமது கருத்து வேறுபாடுகளை மறந்து நாட்டின்தேசியப்பிரச்சினையான இனப்பிரச்சினை தீர்வில் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வருவது அவசியமாகும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைத்தலைவர்களுள் ஒருவரும் அமைச்சருமான ராவூப்ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன் தினம் இடம் பெற்ற அவசர கால நீடிப்பு பிரேரணை பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இவ்விவாதத்தில் கலந்து கொண்ட அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தெரிவிக்கையில்; வடக்கு-கிழக்கில் தொடரும் மோதலைவிரைவில்முடிவிற்கு கொண்டு வர வேண்டும். காலம் இழுத்தடிக்கப்படுவதானது வீண் உயிரிழப்பையும் சொத்து இழப்பிற்குமே வழிகோலும்.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ரிச்சட் பத்திரன உரையாற்றுகையில்; எந்த ஒரு காரணத்திற்காகவும் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல் நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது.

விடுதலைப் புலிகள் பலமிழந்த நிலையிலேயே யுத்த நிறுத்தத்திற்குஅழைப்புவிடுத்துள்ளனர். ஆனையிறவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்த போது பெருத்த எக்காளமிட்ட எதிர்க் கட்சியினர் தற்போது மௌனம் சாதிப்பதன் அர்த்தம் என்ன? என்றவாறு அவர் கேள்வி எழுப்பினார். (ந)

## 6 பேர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் வகையில், யாழ் குடாநாட்டு தபாலகங்களின் நிர்வாக கணக்காளர் அலுவலகங்களைச் சேர்ந்த 6 உத்தியோகத்தர்கள் கொழும்பு சென்றுள்ளனர். (உ)

## சமுர்த்தி செயலணிக்குழுக் கூட்டம்

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஜே/135, நவாலி கிழக்கு கிராமசேவகர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணிக்குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க.த.க பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமுர்த்தி முகாமையாளர் கே. குமாரவேல் தலைமையில் இடம்பெறும் இக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் உட்பட க.செல்வராசா, மு.பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ச-120)

## கசிப்பு பறிமுதல்

(கரணவாய்)

அல்வாய்மேற்கு, கொற்றாவத்தையில் உற்பத்திசெய்யப்பட்டு விற்பனைக்குச் கொண்டுசெல்லப்பட்ட கசிப்பு பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இச்சம்பவத்தில், விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்ட ஏழு போத்தல் கசிப்பு, அப்பகுதி வாழ் இளைஞர்களால், பறிமுதல் செய்யப்பட்டு, அழிக்கப்பட்டதோடு அதனை விற்பதற்காகக் கொண்டுசென்ற நபரும் எச்சரிக்கை செய்து அனுப்பப்பட்டுள்ளார்.

இது போன்ற சம்பவம் முன்பும் ஒருதடவை இதே இடத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-27)

## உடற்கல்வி பரீட்சை முடிவுகள்

(திருநெல்வேலி)

யாழ் பல்கலைக்கழக உடற்கல்வி இரண்டாம் அணி மாணவர்களின் முதலாம் வருட பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி பரீட்சையில் மூன்று மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளதாகவும் அறியப்படுகிறது

இதேவேளையில் முதலாம் அணி மாணவர்களின் இரண்டாம்வருட பரீட்சை அடுத்த வாரம் வெளியிடப்படலாம் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க-22)

# மனித நேயம்மிக்க கவிதைகளை இயற்றி பெருமை பெற்றவர் கவிஞர் சிவானந்தன்

பேராசிரியர்:
**க. அருணாசலம்**
தமிழ்த்துறை
(பேராதனை பல்கலைக்கழகம்)

தமிழும் அறிவியலும் தொடர்பாகப் பாரதியார், பாரதிதாசன், குலோத்துங்கன், வைரமுத்து, சிவசேகரம் எனப் பலரும் கவிதைகளை வடித்துள்ளனரேனும் சிவானந்தனின் கவிதைகள் இவற்றிலிருந்து பெருமளவு வேறுபட்டனவாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கல்வயல் கவிஞர்

அறிவியல் பட்டதாரியான சிவானந்தன் அறிவியற் கருத்துகளை மிகவும் எளிமையாக விளக்கவல்லவர்; அதே சமயம் சரள நடையில் கவிதைகளையும் இயற்ற வல்லவர் என்பதை அவரது கவிதைகள் புலப்படுத்தி நிற்கின்றன. அவரது கவிதைகளுள் ஒரு பகுதி 'கண்டறியாதது' (1969) என்னும் தொகுதியாக வெளிவந்துள்ளது. சாவகச்சேரி கல்வயல் என்றதும் மூன்று கவிஞர்கள் எமது மனக்கண்முன் நிற்பர். இ. முருகையன், இ. சிவானந்தன், கல்வயல் வே. குமாரசாமி ஆகியோரே அம்மூவருமாவர். இலங்கையின் முதுபெரும் கவிஞர்களுள் ஒருவரான முருகையனின் இளவலே சிவானந்தனாவார்.

கண்டறியாதது என்னும் கவிதைத் தொகுதியில் கவிஞரது முன்னுரையாக 'என் அவா' என்னும் பகுதி அமைந்துள்ளது. அதனையும் கவிஞர் கவிதையாகவே வடித்துள்ளார். இப்பகுதி நுணித்து நோக்கத் தக்கது. கவிஞரின் ஆதங்கம், கவிதைகளை இயற்றியதன் நோக்கம். சமுதாய நல ஈடுபாடு, மானிடநேயம், புத்துலகம் சமைக்கமுனையும் தீவிரவேட்கை, அறிவியல் கல்வியைத் தாய்மொழியிலே கற்க வேண்டியதன் அவசியம், அறிவியல் என்பது ஒரு சிலரின் தனிமையுடைமையாகவன்றி அனைவரதும் பொதுவுடைமையாகி எல்லோரும் எல்லாப் பெருஞ் செல்வமும் பெறவேண்டும் என்னும் பொது நல நாட்டம் முதலியவற்றை அவரது கவிதைகளில் ஒருங்கே காண முடிகின்றது.

அறிவியல் தொடர்பான ஆங்கிலப் பதங்களுக்கு ஏற்ற தமிழ்ப்பதங்களையும் கவிஞர் கையாண்டுள்ள திறன் பாராட்டத் தக்கஒன்றாகும். கவிதை வடிவில் அமைந்த - உரையாடல் மூலமாக மிக எளிமையான முறையிலும், நகைச் சுவையுடனும் படிப்போரை ஈர்க்கும் வகையிலும் அரியபல அறிவியற் கருத்துகளை மிக எளிமையாக விளங்கப்படுத்தியுள்ளமை விண்டுரைக்கத் தக்க ஒன்றாகும்.

### பாமரருக்கு அறிவியல்

கல்விக் கூடங்களில் மட்டுமன்றி வீடுகளிலும் பாமர மக்கள் மத்தியிலும் அறிவியற் கருத்துக்கள் பரவுவதற்கும் பாமரமக்களும் இலகுவாக அறிவியற் கருத்துகளைப் புரிந்து கொள்வதற்கும் அவரது கவிதைகள் கைகோர்த்து உதவும்என்பதில் ஐயமில்லை. மிகச் சிக்கலான விடயங்களையும் கவிஞர் மிக எளிமையாகக் கவிதைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அறிவியல் என்றதும் இலகுவில் புரிந்துகொள்ளமுடியாத புதிர் என அஞ்சத்தேவையில்லை என்பதையும் அறிவியலை ஜனரஞ்சகப் படுத்த வேண்டும் என்பதையும் கவிதைகள் மூலமாகக் கவிஞர் வெளிப்படுத்தியிருக்கும் பாங்குபாராட்டத்தக்கது.

### தாய் மொழியில்

சிரமங்களைப் பாராது சிங்களச் சகோதரர்கள் அறிவியலைத் தமது தாய்மொழியில் கற்கத் தொடங்கிய பின்பும் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த கல்விமான்கள் பலர் ஆங்கிலேயனுக் கடிமை பூண்டு ஆங்கில வாணியை நிதமும் தொழுது தாய்மொழியை உதாசீனம் செய்து செம்மறியாடுகள் போன்று செயற்படுவதைக் கண்டு கவிஞர் உள்ளம் கொதிக்கின்றார். அறிவியற்கல்வியைத் தமிழிற் கற்க முடியாது; அறிவியல்என்பது புராணமோ பாட்டோ அன்று. பெருமைக்குரிய அறிவியலை ஆங்கிலத்தின் மூலமே கற்க வேண்டும்: ஆங்கிலத்தினூடாகவே அறிவியல் அறிவினைப் பெறமுடியும் என்றெல்லாம் முரண்டு பிடித்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்துக் கவிஞர் அனுதாபப் படுகின்றார். ஆத்திரங்கொள்கின்றார்: செம்மறி ஆடுகளே என விளித்து வசைபாடுகிறார்.

அறிவியற்கல்வியை ஒரு சிலர் சுயநலங் கருதித் தமது உடைமையாக வைத்துக் கொண்டு கற்றறிந்தவர்கள் தாமே யெனத்தருக்கித் திரிய

## திறனாய்வுக் களம்

முனைவதையும் கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியாகிய அறிவியலின் மூலம் தாம் மட்டுமே பெரும் நன்மைகளைப் பெற முயல்வதையும் கண்டு கவிஞர் கொதித்தெழுகின்றார்.

### அன்றாட உபயோகம்

கவிஞர் தனது அதிகமான கவிதைகளில், எமது அன்றாட வாழ்வில் முக்கியத்துவம் பெறும் நிகழ்ச்சிகள், பாவனைப் பொருட்கள் முதலியன பற்றியே அறிவியல் பூர்வமாக விளக்கியுள்ளார்.

சருவம் முட்ட நீரை நிறைத்துக் கொதிக்க வைக்கும் போது, முதலிற் சருவத்திலுள்ள நீர்மட்டம் இறங்குதல், பின்னர் படிப்படியாக நீர்மட்டம் உயர்ந்து பொங்கி வழிதல், அதற்கான காரணங்கள், தேய்காயும் பன்னாடையும் விழும்போது, தேங்காய் முதலில்விழக்காரணம், நியூற்றனின் இயக்க விதிபற்றிய விளக்கம் மின்னல்கடத்தியினை இணைப்பதற்கான காரணம், இடிமின்னல் பற்றிய விளக்கம், வானவில்லின் வடிவான வண்ணமொளிர் தோற்றத்தின் வரலாறு, ஒளித்தெறிப்பு ஒளிமுறிவு ஆகியன பற்றிய விளக்கம், வெய்யில் மின்காந்த அலை வடிவு, கதிர்வீச்சு, வெப்பத் தெறிப்பு என்பன கறுப்பு நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் இடம்பெறும் வேறுபட்ட அளவு, வெள்ளை நிறம் வெயிலுக்கும் கறுப்பு நிறம் குளிருக்கும் பொருத்தமாக அமைவதன் காரணம், தூக்குத் தராசின் தத்துவங்கள், டைனமோ, சுதந்திர இலத்திரன்கள், சுடுநீர்ப் போத்தல், நீரிறைக்கும் இயந்திரம், ஒலிபரப்பி, வெப்பமானி, மின்சூள் (டோர்ச் லைற்), பெற்றொமக்ஸ், இசைக்கருவிகள், முரசுகருவிகள், சைக்கிள் பம், 'லைற்றர்', சுவர்மணிக் கூட்டின் ஊசல், கோடையிலும் மாரியிலும் சுவர் மணிக்கூட்டின் நேரம் சிறிது வித்தியாசமாகக் காரணம், அதனைத் திருத்தும் முறை, வளிமண்டலத்து வளியும் பனியும், சலூனில் நுரை தண்ணீர் அடித்தல், ஒலி இயக்கம், அமுக்கம், ஈர்ப்புமையம் முதலியன பற்றிய கவிஞரது எளிமையான விளக்கம் வியப்பூட்டுவனவாகும்.

காந்தம் பற்றி விளக்கப் புகுந்த கவிஞர்,

காந்தம் நீ காணாவிட்டால்
கதைப்பார்கள் கேட்டிருப்பாய்,

'காந்தம்' உன் மனைவியானால்
கவர்ச்சியை அறிவாய் தானே,

காந்தத்தின் விளைவு தன்னை
உணர்ந்திடும் பிரதேசத்தைக்

காந்தமண்டலம் என்பார்கள்
காந்தமொன்றிங்கேயிந்த

எனப்பொருத்தமான உவமையுடன் கூறுகின்றார்.

### சமூகவிரோதிகள்

இயந்திரங்கள் செயற்படுவதற்கான (பொறிமுறை) சிறுவினா பற்றி விளக்கிச் சொல்லும் கவிஞர், அதற்கு உவமையாகச் சமூக விரோதிகளின் செயல்களையும், அவர்களைப் புறங்காணும் சக்திகளையும் வெளிப்படுத்தியுள்ளமை சிந்திக்கத்தக்கது.

மின்சூள் (டோர்ச்லைற்) இயங்கும் முறையை விளக்க வந்த கவிஞர் மின்சூளுக்குத் தேவையான 'பற்றறி'யை எல்லோரும் இலகுவிற் பெற முடியாத வாறு கூட்டுறவுக் கடைக்காரர் செய்யும் சதி வேலைகளையும், அவற்றுக்கெதிராகப் பாமரர் செயற்படவேண்டியதன் அவசியத்தையும் விளக்கியுள்ளமை அவதானிக்கத்தக்கது.

'கண்டறியாதது' என்னும் இக்கவிதைத் தொகுதியிலமைந்துள்ளஒவ்வொருகவிதையினதும் இறுதி அடுத்துவரும் கவிதையினது தொடக்கமாக அந்தாதி முறையில் அமைந்துள்ளமையும் நகைசுவையும் சமூக நோக்கும் கொண்டனவாக விளங்குகின்றமையும் மனங்கொளத் தக்கவை. கவிதைகளுக்கு உயிரூட்டும் வகையில் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளமையும் 1960 களின் இறுதி வரை பேச்சு வழக்கில் முக்கியத்துவம் பெற்றிருந்த சொற்கள் பலஇன்றுஅருகிவருகின்றமையும் அவதானிக்கத்தக்க ஒன்றாகும்.

### பேச்சு வழக்கு

இவ்வகையில் முக்கியமான ஒருசில பேச்சுவழக்குச் சொற்களை இங்கு அவதானிக்கலாம், புறக்கிறாசி, புழுக்கைப்பயல், சோக்கான, எழுப்பம், ஒத்தாப்பு, திண்ணை, நேசுப்பொட்டையள், சாய்ச்சாய், ஆச்சிதோதாக, தண்ணிபோடுதல், அருமந்தப்போலே, இஞ்சேரும், சொண்டுரஞ்சி, ஆடுகால், நோஞ்சான், பச்சைப்படுகள்ளன், கசட்டுப் பயல்கள், பெட்டிசம், கோதாரி, பம்மாத்து, வில்லங்கம், சுணக்கம், சீலம்பாய் சொட்டை, நொட்டை, இஞ்சாரும், பெட்டை, பொடி பொடிப்பயல், பொடிப் புள்ளை, கசவாரம், குஞ்சியர், கொப்பர், மினைக் கெடுதல் முதலிய சொற்கள் அவதானிக்கத் தக்கவை. கூடவே யாழ்ப்பாண மக்களின்பழக்க, வழங்கள், சடங்கு முறைகள், விருந்துபசார வைபவங்கள், நம்பிக்கைகள் சம்பிரதாயங்கள் முதலியவற்றையும் ஒருங்கே வெளிப் படுத்தியுள்ளார்.

சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம்காரசாரமான முறையில் சமுதாய விமர்சனம் செய்யுங் கவிஞர் கூடவே முற்போக்குச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தியுள்ளார். செய்யுள்வளமும்பொருள்வளமும் கருத்துச்செறிவும்நிறைந்துள்ள அவரது கவிதைகளில் இடம்பெற்றுள்ள உவமைகளும், சொல்லாட்சிகளும், நெஞ்சில் ஆழப்பதிந்து, சிந்தனையைத் தூண்டுவனவாக விளங்குகின்றன.

உலகின் புகழ் பூத்த விஞ்ஞானிகள், அவர்களது கண்டுபிடிப்புகள், சாதனைகள், அறிவியல் சாதனங்களின் வளர்ச்சி, வரலாறு முதலியவற்றையும்இத்தொகுதியிலமைந்துள்ள கவிதைகள் பலவற்றில் காணலாம்.

### ஒளிவிளக்கு

பாமர மக்களின்அறியாமை என்னும் இருளை அகற்றும் ஒளிவிளக்கான அறிவியல் பற்றிய விளக்கமும், காதற்சுவையும், நகைச்சுவையும் இல்லறமாண்பும், தத்துவ விசாரமும் சமுதாய நல ஈடுபாடும் மாறி மாறி இடம் பெறுவது மனங்கொள்ளத் தக்கது. பேச்சு வழக்குச் சொற்கள் கலந்த உயிரோட்டம் மிக்க எளிமையான நடை அவரது கவிதைகளுக்குத் தனிச் சிறப்பையளிக்கின்றது. தமிழ் கவிதையுலகில் மிக மிக அவசியமாக வேண்டப்படுவதும், பெரும்பயன் நல்குவதும் தனித்துவம் மிக்கதுமான இம்முயற்சி மனமுவந்து வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும். சுருங்கக் கூறின் இக்கவிதைத் தொகுதியானது தமிழிலெழுந்துள்ள முதலாவதுஅறிவியற் காப்பியம் எனலாம்.

---

## அராலியில் உழவர் விழா

(சங்சானை)

அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகத்தால் வருடா வருடம் தைப்பொங்கல் தினத்தன்று நடத்தப்படும் உழவர் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது.

ச. லவக்குமார் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனும் கௌரவ விருந்தினராக வலி. மேற்குபிரதேச செயலர் நா. வேதநாயகனும் கலந்து கொள்வர்.

மேற்படி விழாவில் விரைவான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் கைக் கொடி, மாட்டுச் சவாரி, கயிறு இழுத்தல், காட்சி உதைபந்தாட்டம் உட்பட பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். (ச-24)

## பரிசளிப்பு வைபவம் இன்று

(கரணவாய்)

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம், வடமாரட்சி வலயப் பாடசாலைமாணவர்களிடைய நடத்திய உதைபந்தாட்டப் போட்டியின் பரிசளிப்புவைபவம்இன்று காலை 9.00 மணிக்கு நெல்லியடி மத்தியமகாவித்தியாலயமண்டபத்தில்நடைபெறவுள்ளது.

மேற்படி சங்கத் தலைவர் மு. வேதாபரணம் தலைமையில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். வலய உதடற்கல்வி உவிப்பணிப்பாளர் த. அருணகிரிராஜாகலந்து கொள்வார்.

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற போட்டிகளில், 21 வயதுப் பிரிவினர்க்கான போட்டியில் தேவரையாளி இந்துக் கல்லூரியும், 14 வயதுப் பிரிவினர்க்கான போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது (ச-27)

## அவசர பணிப்பு

(மானிப்பாய்)

கிராம அலுவலர்கள் பின்வரும் நாட்களில் தத்தமது அலுவலங்களில் இருந்து கட்டாயமாக பணிபுரிய வேண்டுமென்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது..

இதன் பிரகாரம் திங்கள் வியாழன்முழுநாட்கலும் சனி அரை நாளும் அலுவலகங்களில் இருந்து பணி புரிய வேண்டுமென்று பணிக்கப் பட்டுள்ளது. (க)

## நிரந்தர நியமனம்

[யாழ்ப்பாணம்]

வலி கிழக்கு பிரதேச சபையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 21 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வலி கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் பூ. குணசிங்கம் கடந்த 10 ஆம் திகதி வழங்கினார். (வி)

## கருத்தரங்கு தொடரில்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி நிறுவன இணைப்புக் குழுவின் இளைஞர் சபையினர், மாதம் இருமுறை நடத்தும் கருத்தரங்குத் தொடர் இன்றுமாலை 3.30 மணிக்கு, யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'ஆளுமை' (பகுதி-11) என்ற தலைப்பின் கீழ், வைத்திய கலாநிதி சிவசங்கர் கருத்துரை வழங்குவார்.

ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-104)

## பிரதேச சபை உறுப்பினர்க்கான கூட்டம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை உறுப்பினர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை, காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைத்து உறுப்பினர்களையும் தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பிரதேசச் செயலாளர் சி. பசுபதி தெரிவித்துள்ளார். (ச-27)

## இன்று ஒரு தகவல்

# கனவுகள் கருத்துள்ளனவா

1865 ஆம் ஆண்டில் ஒரு நாள். அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் தன் மனைவியிடம் ''சமீபத்திலே நான் ஒரு கனவு கண்டேன்'' என்கிறார். ''என்ன கனவு'' என்று மனைவி கேட்க அவர் விவரிக்கிறார்.

''ஒரு நாள், வெள்ளை மாளிகையில் அழுகைச் சத்தம் கேட்கிறது அதைக் கேட்டுத் திடீரென நான் விழித்துக் கொள்கின்றேன். சனங்கள் எல்லாம் கூட்டம் கூட்டமாக அழுது கொண்டு நிற்கிறார்கள். எனக்கு எதுவும் புரியவில்லை. மாடியிலே இருந்து இறங்கிக் கீழே வருகின்றேன். எல்லா அறையிலும் வெளிச்சம்! அழுகைச் சத்தம் தொடர்ந்து கேட்கிறது. அந்தச் சத்தம் எங்கிருந்து கேட்கிறது. என ஒவ்வொரு அறையாகத் தேடிக்கொண்டு வருகின்றேன். கிழக்குப்பக்க அறையுள் நுழைகின்றேன். சவ ஊர்வலத்துக்கு தயாராக ஒரு உடலைக் கிடத்தியிருக்கிறார்கள். முகம் மூடியிருக்கிறது. அதைச் சுற்றி இருந்தவர்கள் அழுது கொண்டிருந்தார்கள் என்று சொன்னார். ''யாருடைய சடலம்'' என்று மனைவி கேட்க,'' ஜனாதிபதியுடையது. அவரை யாரோ கொலை செய்திருக்கிறார்கள் என்கிறார் ஆபிரகாம்லிங்கன். இது நடந்து கொஞ்ச நாளில் என்ன நடந்தது என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும், கனவு என்பது என்ன? கனவிலே நடக்கிறதற்கும் கண் முன்னால் நடப்பதற்கும் சம்பந்தம் இருக்குமா?

கனவுகள் விடை காணமுடியாத புதிர் என்று சிலர் சொல்கிறார்கள். கனவு மனச்சாட்சியின் குரல் என்கிறார் சோக்கிரடீஸ். உடல் அதியினால் ஏற்படுகிற ஒரு வீண் காட்சி என்கிறார் வால்டேர். உணர்வற்றஒரு நிலைக்கு அழைத்து செல்கிற இராச பாதை என்கிறார் ஃபிராய்டு. கனவுகள் மனிதனுக்கு மட்டுமில்லை. மிருகங்களுக்கும் வருகிறதாகத் தெரிகிறது.

இராமாயணத்திலே திரிசடை கண்ட கனவு சிலப்பதிகாரத்திலே க்ண்ணகி கண்ட கனவு இவை எல்லாம்பின்னால் நடக்கப்போவதைமுன் கூட்டியே சொல்லி விட்டன. எகிப்து வரலாறு, நாலாவது துட்மோஸ் என்று ஒருத்தர் வேட்டையாடி விட்டு வந்த களைப்பிலே ''ஸ்பிங்ஸ்'' தேவதை சிலைக்குப் பக்கத்திலே படுத்துத்தூங்கிப்போய் விட்டார். அப்போதுஒரு கனவு அவர் பட்டத்திற்கு வருகிற மாதிரி. அது மாதிரியே அவர் பட்டத்துக்கும் வந்து விட்டார்.

கனவுகள் சில சமயம்ஒழுங்காக கோர்வையாக வருகிறது சில சமயம் ஒன்றுக்கொன்று சம்பந்தம்இல்லாமல் கன்னா பின்னா என்றுவரும். விடிந்ததும் யோசித்துப்பார்த்தால் என்ன கனவென்றே நினைப்பு வராது. பொதுவாக மூன்று நிலைமைகளிலேகனவு வரலாம். ஒன்று கடுமையான அசதி, இல்லையென்றால் உடல் நிலைபாதிப்பு இதனாலேவரலாம். இன்னொன்று மனதில் உள்ள ஆசைகள் வெளிப்படுத்துகிற வகையிலேயும் ஏற்படலாம். மூன்றாவது, ஆத்மாவிலே இருந்து தெய்வீக சக்தியால் வெளிப்படுகிறதென்று சிலர் சொல்கிறார்கள். இதில முதல் சொன்ன நிலைக்கு விளக்கம் கொடுக்க முடியும். அடுத்த இரண்டு நிலைக்கும் விளக்கம் சொல்வது கஷ்டம்.

இந்த உலகம் முடிவில்லாதது சிக்கல் மிகுந்தது இதைச் சமாளிக்க செயல்களை ஒழுங்கு முறைப் படுத்தி இயங்கிவருகிற மனித இனத்திற்கு இரண்டு வழிகள் இருக்கிறது. முதல் வழி – நமது மூளையின்இடது பகுதியோடு தொடர்பு உள்ளது. நாம் விழித்திருக்கும் போது செய்கிற செயல்கள் எல்லாமே இதன் கட்டளைப்படியே நடக்கிறதாம்.

இரண்டாவது வழி – நமது மூளையின் வலப் பகுதியோடு தொடர்புடையது. உண்மைச் செயலைவிட உணர்வுக்கு மதிப்புக் கொடுகிற இந்தப் பகுதிதான் கனவு காண்கின்ற மன நிலைக்கு வழிமுறை என்று தோன்றுகின்றது. பகலில் ஏற்படுகிற பலவித உணர்ச்சிகள் இங்கே பதிவாகிறதாம், இராத்திரி, தூக்கத்திலே கனவு என்கிற வடிகால் மூலமாக அதற்கெல்லாம் தீர்வுகாணப்படுகிறது. அப்படி என்று விளக்கம் கொடுக்கிறார்கள்.

பொதுவாக கனவுகாண்பது நல்லதென்று தான் பலர் சொல்கிறார்கள். ஆழ்ந்த தூக்கம் போதுமான ஓய்வைநமது மூளைக்குக் கொடுக்கிறது. தீர்க்கமுடியாத சிக்கல்களுக்கு கனவு மூலமாக தீர்வு ஏற்பட்டிருக்கிறது என்றுஅவர்கள் சொல்கிறார்கள். எவ்வளவு பேர் தினமும் கனவு கண்டுகொண்டுதான் இருக்கிறார்கள் அவ்வளவும் உடனேநடந்துவிடுவதில்லை. அபூர்வமாகச் சில நடந்திருக்கின்றன. அதைத்தான் ஆரம்பத்தில் சொன்னேன், அதற்காக நீங்கள் பயந்துகொண்டிருக்காதீர்கள். இதற்காகத்தான் பெரியவர்கள் கெட்ட கனவுக்கு நல்ல பலன் உண்டென்றும் எதிர்மறையாகப் பலனுண்டென்றும் சொல்வார்கள். பத்துரூபா தொலைந்ததாகக் கனவுகண்டால் பத்து ரூபா வருமானமாம். பெயிலானது மாதிரி கனவுகண்டால் பாசாகிவிடுமாம். இப்படி ஒரு மனோதைரியத்துக்காகச் சொல்லி வைக்கிறது உண்டு. இதிலும் ஒருகஷ்டம்.

ஒருத்தர் ஓடிவந்தார், ''சார் இன்றைக்கு நான் உங்கள் வீட்டிலேயே தங்கிக் கொள்கிறேன்'' என்று பரிதாபமாகக் கெஞ்சினார். ஏனென்றுகேட்டேன் ''நேற்று ஒரு கனவுகண்டேன் சார்'' என்று சொன்னார், என்ன கனவு என்றேன். என் சம்சாரத்தை நான் அடிக்கிறது மாதிரி என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சட்டவிரோத மின் பெற்றவர் ஆஸ்பத்திரியில்

(கரணவாய்)

சட்ட விரோதமான முறையில் மின்சார இணைப்பைப் பெற முயன்ற ஒருவர் மின்சாரம் தாக்கி மந்திகைமருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இமையாணன் கிழக்கு அறிவாலயத்தைச்சேர்ந்த, நான்கு பிள்ளைகளின் தந்தையான குமார் தம்பிராசா என்பவரே மின்சாரம் தாக்கி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (ச-27)

### பல் குழல்கள் இருக்குமிடத்தில்

# பல்குரல்கள் ஒலிக்க செய்ய வேண்டும்

# அழிவை தடுக்க இதுவே வழி

## அமைச்சர் டக்ளஸ் உரை

(யாழ்ப்பாணம்)

'பல்குழல்' இருக்கும்மிடத்தில் அதை அகற்றி விட்டு'பல்குரல்கள்' ஒலிக்க வேண்டும். அப்போது தான் அழிவுகளையும் சேதங்களையும் தடுக்க முடியும் இவ்வாறு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்கு கிழக்கு தமிழ்விவகார அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா நேற்று முன் தினம் சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும்உத்தியோகத்தர் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட தலைமையகத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அமைச்சர்தொடர்ந்தும்உரையாற்றுகையில், சரியான வழி நடத்தலை தெரிவு செய்து மக்களிடம் பின்பற்றச் செய்ய வேண்டும்.

சரியானதை தெரிவு செய்வதன் மூலம் உங்களையும் மக்களையும் வழி நடத்த முடியும் அதற்கூடாகவே முன்னேற்றத்தை அடைய முடியும்.

தவறான வழியில் போகின்றவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் எமது செயற்பாடுகள் அமையக் கூடாது.

உண்மையான கோஷங்களைமுன்வைப்பதற்கு காலம் இருந்தது. அதை விடுத்து சிலர் இப்போதுகோஷங்களை முன்வைப்பது எமக்கு சந்தேகம் தருகிறது எனத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் எண்ணூறுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மேற்படிகூட்டத்தில்அமைச்சருடன் பாராளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் மற்றும் உடன்பிரதேசசபை தலைவர்களும் இருந்தனர். (க-3)

### இன்றைய கூடைப் பந்தாட்டத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்று வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்றைய தினம் காலை 7. 30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள ஆட்டத் தொடரில்.

திருக்குடும்பக் கன்னியர் மடப் பெண்கள் அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரியும் ஆண்கள் அணியில் யாழ். இந்துக் கல்லூரி ஏ. அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும் மோதவுள்ளன.

அதே வேளை மாலை 4.00 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டத்தில்,

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி பெண்கள் அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், யாழ். பரியோவான் கல்லூரி ஆண்கள் அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ச)

### கரணவாய் சுற்றிவளைப்பு

(கரணவாய்)

கரணவாய், சோழங்கன் மண்டான் பகுதி கடந்த 11ஆம் திகதி பாதுகாப்புப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நீண்டகாலமாக இப்பகுதி படையினரால் தேடுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-27)

### ஸ்கந்தாவில் கருத்தரங்கு

ஸ்கந்தவரோதயா கல்லூரியில் எதிர் வரும் திங்கள் காலை 9. 00 மணி அளவில் அதிபர் க. சிவாஜி தலைமையில் உயர்தரவகுப்பு மாணவரின் புலமை பரிசு என்ற விடயம் பற்றி கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் விசேட உரையாற்றுபவர் செல்வன் மகேந்திரராஜா பிரவீனன். இவர் அவுஸ்திரேலியா பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் ஆவர். க. பொ. உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெறும் மாணவர்கள் எவ்வாறு சர்வதேச பல்கலைக்கழகங்களில் கல்வி வாய்ப்பை பெறலாம் என்ற விடையம் பற்றி இவரது உரை அமையவுள்ளது. (க-05)

### மாதாந்த கூட்டம்

தென்மராட்சி சுகாதார தொண்டர்களுக்கான மாதாந்தக் கூட்டம் எதிர் வரும் 18ந் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மந்திகை மடத்தடியிலுள்ள பாலர் பாடசாலையில் இடம் பெற உள்ளதாக இணைப்பாளர் ப. ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (க- 3)

### கொழும்புத்துறை

# மேற்துப்ப குதியில் திருடர் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு, புங்கன் குளம், சுவாமியார் வீதிப் பகுதிகளில் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள மேற்படி பகுதிகளில், இராணுவத்தினரிடம் அனுமதி பெற்று, உடமைகளைப் பார்வையிடச் செல்வோருள் சில விஷமிகள் அங்குள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான பெறுமதி வாய்ந்த வீட்டு உடமைகளைச் சூறையாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான திருட்டுச்செயலில் ஈடுபடுவோர் கால்நடைகளுக்கு உணவு தேடுவது போல், தந்திரமாக உட்சென்று ஏனைய மக்களது பொருட்களைச் சூறையாடி வருகின்றனர்.

இதுகுறித்து பொது மக்கள் மேற்கொண்டு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று புரியாத நிலையில் தவிக்கின்றனர். (ச-104)

### கருத்து மோதல்

# கைகலப்பாகியதைஅடுத்து இருவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தாரிடையே ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறியதில், தலையில் படுகாயமுற்ற நிலையில் இருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தூரைச் சேர்ந்த சின்னவன் பாக்கியநாதன் (வயது-44) இவரின் மருமகனான அதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா ரஜீவன் (வயது-18) ஆகியோரே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (உ-104)

# மாதகலில் வாள் வெட்டு நால்வர் ஆஸ்பத்திரியில்

## அதிகாலையில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

இராணுவத்தினர் போன்று சத்தமிட்டவாறு வீட்டினுள் நுழைந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று வீட்டிலிருந்தோரை கண்டபடி வாளால் வெட்டியதில் பலத்த காயமடைந்த நால்வர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் மாதகலில் அண்மையில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தின் போது காயமடைந்தவர்களான நடராஜா குகனேஸ்வரி (வயது-51-தாய்), நடராஜா இராஜரட்ணம் (வயது-32-மகன்), நடராஜா ஜாதவரேஸ்வரன் (வயது-21-மகன்), நடராஜா தயாகுமாரி(வயது-26-மகள்) ஆகியோராவர்.

இத் தாக்குதலிற்கான காரணம் இதுவரையில் தெரிவிக்கப்பட வில்லையாயினும் திருட்டுச் சம்பவம் காரணமாக இருக்கலாமெனவும் நம்பப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் வாள் மாதகல் இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் அறியப்படுகிறது. (க)

### விவேகானந்தரின் பிறந்ததின நிகழ்வுகள்

(மந்திகை)

சுவாமி விவேகானந்தரின் 139-வது பிறந்ததினம் எதிர்வரும் 15 திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணச்சாரதா சேவாச்சிரமத்தில் அதிகாலை 5. 30 மணிக்கு மங்கள ஆராதனையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசைகள் நடைபெறும். (க-23)

# ஜம்மு - காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் கூரியஸ் உறுப்பினர்கள் முனைப்பு

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் அனைத்துக் கட்சியின் கூரியஸ் மகாநாட்டு உறுப்பினர்கள் தீவிரமாக உள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

ஐந்துபேர் அடங்கிய குழுவை கூரியஸ் மகாநாட்டு அமைப்பு தெரிவு செய்துள்ளதென்றும், இதில் கயதாஅனிஸா உள்ளிட்டவர்கள் அடங்குவரென்றும் அவர்களுக்குரிய பயண அனுமதிகள் உட்பட சகல ஆவணங்களையும் கொடுத்துதவும்படி கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை சகல அனுமதிகளும் கிடைத்தால் பதினைந்தாம் திகதி பாகிஸ்தானுக்கு பேச்சுவார்த்தைக்குச் செல்ல முடியுமென்று கூரியஸ் தலைவர் தெரிவித்தார்.

மத்திய உள்துறை இந்திய அமைச்சர் அத்வானி ஏற்கனவே இவர்களில் சிலருக்கு அனுமதிகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் மற்றையோருக்கும் அனுமதிவழங்குவதில் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (து)

# இந்தோ. அறிவியல் வளர்ச்சிக்கு இந்தியா பங்களிப்பை வழங்கும்

## பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் எண்ணெய்வள ஆய்வுக்கும் ரயில்வே புனரமைப்புக்கும் எமது அனுபவத்தையும் ஒத்துழைப்பையும் உதவ இருக்கிறோம் என்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்தார்.

இந்தோனேஷியா சென்றிருக்கும் இந்தியப் பிரதமர் அங்கு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு செய்தியாளர் மத்தியில்குறிப்பிடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்; ஆசியான் அமைப்பிலே இந்தோனேஷியா முக்கிய பங்குவகிக்கிறதென்றும் இந்தோனேஷியாவின்தொலைத்தொடர்பு சேவைக்கும் தொழில் நுட்பத்துறைக்கும் ஒத்துழைப்பு வழங்க இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்தியா உபரி உணவுப் பொருட்களை இந்தோனேஷிய மக்களுக்கு வழங்க முன்வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தியாவும் இந்தோனேஷியாவும் கலாசார முறையில் நீண்டகால உறவுகள் உள்ள நாடுகளென்றும் இந்த இரு நாடுகளுமே அணிசேரா நாடுகளில் முன்னணி வகிக்கும் நாடுகளென்றும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தோனேஷிய நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவிக்கையில் இந்தியா ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் அங்கம் வகிப்பதை தமது நாடு ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

இவ்விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாயும், இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட்டும் பேதை ஒழிப்பு ஒப்பந்தம் உட்பட பல்வேறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-து)

## ஐக்கிய நாடுகள் ஸ்தாபன

# ஊழியர்களை தாக்கினராம் அறுவர் மீது குற்றப் பத்திரிகை

## கிழக்குத் தீமோரில் சம்பவம்

(ஜகார்த்தா)

கிழக்கு தீமோரில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன ஊழியர்கள் மூவரை வீதிக்கு இழுத்து வந்து காட்டுமிராண்டித்தனமாக கொலை செய்தகுற்றத்திற்காக ஆறுபேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை நடைபெற இருக்கிறது.

அண்மையில வெளிநாடுகளான அமெரிக்கா, குறோசியா, எத்தியோப்பியா, ஆகியவற்றைச்சேர்ந்த மூவரைச கைலகளுக்குஇழுத்து வந்து தாக்கியதாக அவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

தங்களை இந்தோனேஷியர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இந்த ஆறுபேர் மீதும் குற்றம் நிரூபிக்கப்படுமாயின் பன்னிரண்டு முதல் முப்பத்திரெண்டு ஆண்டுகள் வரை சிறை கிடைக்குமென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# உலக தரிசனம்

# 2 அமைச்சர்கள் ராஜினாமா பசுத் தொற்று காரணமாம்

(பேர்லின்)

பசுக்களை பாதிக்கும் தொற்றுநோய் ஏற்படும் விவகாரம் தொடர்பாக இரு ஜேர்மனிய அமைச்சர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளார்கள்.

இவ்விவகாரம் தொடர்பாக சர்ச்சை எழுந்ததை அடுத்து ஜேர்மனியின் சுகாதாரத்துறை அமைச்சரும் வேளாண்மைத்துறை அமைச்சரும் கடந்த செவ்வாயன்று தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

ஜேர்மனியில் பசு நோய் பரவி வருவதை அடுத்து அங்கிருந்து மாட்டிறைச்சியை கொள்வனவு செய்யும் நாடுகள் கொள்வனவை நிறுத்தியதை அடுத்து ஜேர்மனிஇந்த விவகாரத்தை சரியாக கையாளவில்லைஎன ஐரோப்பிய சமூகம் குற்றம் சாட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

# வர்த்தக ஒப்பந்தம் அதிகாரிகள் பதவிநீக்கம்

தென்கொரியாவுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக வடகொரிய இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட பத்துப்பேரை வடகொரியா பதவிநீக்கம் செய்துள்ளது.

இரண்டு கேணல்களும் எட்டு இராணுவத்தினரும் வடகொரியாவிற்குச் சொந்தமான சொர்கலன்களை அரசுக்குத் தெரியாமல் தென்கொரிய வர்த்தகத்துக்குத் துணையாக விட்டது கண்டுபிடிக்கப்பட்டதால் பதவியிலிருந்து விலக்கப்பட்டனர்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை வடகொரிய அரசு கொடுக்கமறுத்து விட்டதென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# சீனா தாய்வான் அரசுடன் பேச்சு நடத்துவதில்லை

## தாய்வான் அரச ஆலோசகர் தெரிவிப்பு

(பீஜிங்)

சீனா தாய்வானின் எதிர்கட்சியுடனும் வர்த்தகர்களுடனும் பேசுகிறதே அன்றி அரசுடன்பேசுவதில்லைஎன்று தாய்வான் அதிபரின் ஆலோசகர் தெரிவித்தார்.

சீன அரசு தாய்வான் வர்த்தகர்களைப் பாராட்டுவதிலும் அவர்களுடன் பேசுவதிலும் எதிர்கட்சி உறுப்பினர்களுடன் பேச்சுகள் நடத்துகிறதென்றும் அந்த ஆலோசகர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; தாய்வான் ஜனநாயகக் கட்சியுடனோ அரசுடனோ சீன அரசு எந்தப் பேச்சுக்களையும் நடத்துவதில்லையென்றும் அரசை ஒரு பொருட்டாக மதிப்பதில்லையென்றும் அவர் தெரிவித்தார். (து)

# பிரித்தானிய பிரதமர் மீது தக்காளிப்பழம் வீச்சு

(இலண்டன்)

பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர் மீது தக்காளிப் பழம் வீசிய நிகழ்வு அண்மையில் லண்டனில் இடம்பெற்றது.

கடந்த செவ்வாய்க் கிழமை ஈரான் நாட்டிற்கு எதிராக பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டதை ஆட்சேபித்து பிரிட்டன் நகரில் நடைபெற்ற பேரணியின்போது ரொனிபிளேயர் மீது 25வயது இளம் பெண் ஒருவர் தக்காளிப் பழங்களை வீசி எறிந்தார்.

இச்சம்பவத்தின் போது கைது செய்யப்பட்ட இப்பெண் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். (க-ப)

# விண்வெளிக்கு ஏவப்பட்ட ஆட்களற்ற விண்கலம்

## சீனா அனுப்பியதாம்

(பீஜிங்)

சீனா இரண்டாது தடவையாக ஆட்களற்ற விண்கலங்களை விண்வெளிநோக்கி ஏவியுள்ளதாக சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சென்சி-02 எனப் பெயரிட்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்ட இந்த விண்கலம் சீனாவில் வடிவமைக்கப்பட்டதாகும்.

குயுருவான் எனப்படும் செயற்கை கோள் ஏவு தளத்திலிருந்து மேற்படி விண்கலம் ஏவப்பட்டதாக சீன விஞ்ஞானிகள் மேலு தெரிவித்துள்ளனர். (க)

# இன்னும்10 வருடங்களில் ரஷ்யாவின்50வீதத்தினருக்கு எயிட்ஸ் ஏற்படும்

எதிர்வரும் 10 வருடங்களில் ரஷ்யாவில் 50 வீத மாணவர்கள் எய்ட்ஸ் நோய் தாக்கத்திற்கு உள்ளாகும் ஆபத்துள்ளதாக ரஷ்ய வானொலி நேற்று தெரிவித்தது.

ரஷ்யாவில் மிக வேகமாக எய்ட்ஸ் நோய் பரவி வருவதாகவும் போதை வஸ்து பாவனையின் தாக்கத்தைவிட எய்ட்ஸ் நோயின் தாக்கம் மிக அதிகமாக உள்ளதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்தது. (ச)

## விளையாட்டு விழா பற்றிய கலந்துரையாடல்

(சுண்டுக்குளி)

யாழ் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2001 ஆம் ஆண்டு விளையாட்டு விழா பற்றிய கலந்துரையாடலும் குழுப் போட்டிகளுக்கு அணிகளை நிரற்படுத்தலும் தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் 15 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.0 மணிக்கு யாழ் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலாளர் கா செந்தில்நந்தன் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில்,கழகப் பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்வதுடன், வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து அன்றைய தினம் தம்மிடம் கையளிக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார் (ச-110)

## குருக்கள் அஞ்சலி நிகழ்வு

(மந்திகை)

கடந்த மாதம் காலமான நீர்வேலி இராஜேந்திரக் குருக்களின் அஞ்சலி நிகழ்வும் விசேட வழிபாடும் புலோலி மேற்கு தெணியம்மன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பெருமளவு அடியார்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர் (க-23

## சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்களால் நடத்தப்படும் சுவாமி விவேகானந்தரின் ஜெயந்திவிழாவரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை, யாழ். இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் பிற்பகல் 2. 30 மணிக்கு (பழையநேரம்) நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில்,சுவாமிஜியின் பாடல் மற்றும் வரலாறு என்பனவற்றுடன் சொற்பொழிவுகளும் புல்லாங்குழல் இசைக் கச்சேரியும் இடம்பெறும். (ச)

## சங்கம் அங்குரார்ப்பணம்

(மானிப்பாய்)

நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவையாளர் பிரிவின் கீழ், கிராம அபிவிருத்திச்சங்கம்' ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் அங்குரார்ப்பண நிகழ்வில், சங்கத்தின் தலைவராக ச. அம்பிகைபாலனும், செயலாளராக க. கனகரத்தினமும், பொருளாளராக பொ. பொன்னுத்துரையும் உப தலைவர் உப செயலாளர் உட்பட ஏழுபேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-120)

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்
- குறள்

# வலம்புரி

## சிரிப்பின் அர்த்தம்

இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வைக் கண்டுவிடவேண்டுமென்ற பெரு நோக்கோடு நோர்வே அரசு தன்னாலான முயற்சியை மேற்கொண்டு வருகிறது. அப்பணியில் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் தீவிரமாகப் பாடுபட்டு வருகிறார். நோர்வேஇலங்கை வாழ்மக்கள்மீது அக்கறை காட்டுகிறதெனில் அதுஅந்நாட்டின்ஜீவகாருண்யத்தை, மனித நேயத்தையே காட்டி நிற்கிறது.

எனினும் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகள் தமது கடும் எதிர்ப்பைக் காட்டக் கங்கணம் கட்டி விட்டன.

இதன்ஒருகட்டம் எரிக் சோலின்கொடும்பாவியை எரித்தார்கள், அடுத்தகட்டமாகஎரிக்சோலைதனிப்பட்ட முறையில் தூற்ற வெளிக்கிட்டுவிட்டார்கள் இதன் ஒருபகுதியே சிஹல உறுமய கட்சியின் செயலாளர் திலக் கருணாரட்ண நேற்று முன்தினம பாராளுமன்றில் எரிக் சோலை - அவரின் தனிப்பட்ட வாழ்க்கையை இழுத்து கன்னா பின்னா எனப் பேசித்தள்ளினார். இதனை பாராளுமன்றக் கலரியில் இருந்த எரிக் சோல் கேட்டுக் கொண்டு புன்சிரிப்பை உதிர்த்தார். அச் சிரிப்பிற்கு பல்வேறு அர்த்தங்கள் உண்டு.ஒன்று இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியையே துப்பாக்கியால் அடித்த மனநோயாளி இருக்கும் இந்நாட்டில் பாராளுமன்றிலும் குறைந்தது ஒரு மனநோயாளியாவது இருக்காமலா போகும். எனவே அது திலக்கருணாரட்ண தான் என எண்ணி சிரித்திருக்கலாம். அல்லது நோர்வே அங்கம் வகிக்கும் உதவி வழங்கும் நாடுகளின் குழுவிடம் பிச்சை கேட்டு வந்த இலங்கையின் பிரஜை - மக்கள் பிரதிநிதி ஒருவர் தன்னிலை மறந்து துள்ளிக் குதிக்கிறாரோ என எண்ணிச் சிரித்திருக்கலாம்.

இவ்வாறு எரிக்சோலின் புன் சிரிப்பிற்கு பல அர்த்தங்கள் உண்டு, என்பதுடன், திலக்கருணாரட்ணவின் உரையின் மூலம் அவர் சார்ந்த இனத்தின் பண்பாடு, பழக்கவழக்கம், போன்றவற்றை இலகுவில் புரிந்து கொண்டிருப்பார் என்பதில் ஐயமில்லை.

# எழுத்தாளர்களுடைய ஆக்கங்களே ஆய்விற்கு தூண்டு கோலாகின்றன

## நூல் வெளியீட்டில் தெரிவிப்பு

(தென்மராட்சி)

இன்றைய யாழ்ப்பாணத்தில் நாங்கள் பலவற்றை இழந்து கொண்டிருக்கின்றோம் இழந்தவை இழந்தவையாகவே போய்க்கொண்டிருக்கின்றன. எழுத்தாளர்கள் தமது நாவல்களைத் தொகுத்து நூலுருவில் வெளியிடுகின்றபோது ஆய்வாளர்களுக்கு அவர்கள் வசதிசெய்வதோடு இலக்கிய வரலாற்றில் தங்கள் பங்களிப்பு எத்தகையது என்பதை நிலைநிறுத்திக் கொள்ளமுடியும்

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் விசாலாட்சி மண்டபத்தில் யாழ் இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்து நடத்திய திருமதி பத்தினியம்மா திலகநாயகம் (சிதம்பரபத்தினி) அவர்களின் 'நிஜத்தின் நிழல்' சிறுகதைத்தொகுதி நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்

யாழ். இலக்கிய வட்டத்தின் தலைவர் செங்கை ஆழியன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலாநிதி எஸ். சிவலிங்கராசா அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

சிறுகதை இலக்கிய வளர்ச்சி பற்றியும் ஈழத்து இலக்கியப் போக்கு பற்றியும் படிக்கின்ற ஒரு மாணவன் என்ற வகையில் எங்களுக்குமுன்வாழ்ந்த- எங்களோடு வாழ்ந்த பலரைப்பற்றிய தகவல்களை தரவுகளைப் பெற முடியாமல் திண்டாடுகின்றோம். எமது பல்கலைக்கழகத்திலே நூறு பேர் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பல்கலைக்கழகத்தில் பயில்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பதற்காகதலைப்புக் கொடுக்கின்ற பொறுப்பு எனக்கு இருக்கின்றது.

ஈழத்து இலக்கிய வரலாற்றிலே சிறப்பாக நவீன இலக்கிய வரலாற்றில் ஈடுபாடு கொண்டவர்கள் எழுத்துத் துறையில் பங்களிப்புச் செய்தவர்கள் அவர்களுடைய வாழ்வுப் பணி, தொழிற்பாடு போன்ற அம்சங்களைத் தொகுத்து நாங்கள் எங்கள் துறையிலே பேணி வைத்துக் கொண்டுவருகிறோம்.

சிதம்பரபத்தினியின்படைப்புகள் பெண் எழுத்தாளர் என்ற வரிசையில் ஆய்வுசெய்யப்படவேண்டியவை ஆனால் இன்னமும் ஆய்வுசெய்யப்படவில்லை. செய்யப்படாமைக்குரிய காரணம் இத்தகைய தொகுதி வராமையேயாகும். அந்தளவில் அவரது சிறுகதைத் தொகுதியை வெளிக் கொண்டு வந்தமைக்காக யாழ். இலக்கிய வட்டத்துக்கு நாம் தலைசாய்க்கின்றோம்.

சிதம்பரபத்தினியின் கதைகளைப் படிக்கின்றபோது. பெரும்பாலும் ஒரு நிர்வாக அதிகாரி என்ற வகையில் இனம் காண்பதைவிட மனித நேயம் கொண்ட ஒரு பெண்மை அங்கே பேசுகின்றதுஎன்பதுதான்என்னுடைய கருத்தாகும் என்றார்.

நிஜத்தின் நிழல் நூலின் முதல் பிரதியை கலாநிதி எஸ் சிவலிங்கராஜா வெளியிட்டுவைக்க யாழ். இந்துக் கல்லூரின் முன்னாள் அதிபர் சி.க குகதாசன் பெற்றுக் கொண்டார்.

பிரமுகர் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்,

(சு-77)

### விடுதலைப்புலிகள்

# சமாதானத்திற்கு வருவார்களானால் அரசியல் துறவறம் பூணத்தயார்

## அமைச்சர் டக்ளஸ் உறுதிபட தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கு வருவார்களானால் அரசியலில் மாற்றுக்கருத்து உள்ளனவாக இருக்காது அரசியல்துறவறப்பூணத்தயாரென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண இந்து சமய பேரவையினர் கடந்த 12 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அவரது யாழ்ப்பாண அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்ட ஏனைய கருத்துக்களாவன; 1985 இல் பாதிக்கப்பட்ட செல்வச் சந்நிதி இன்றுவரை புனரமைக்கப்படவில்லை. இதனைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பேரவையினர் கேட்டுக் கொண்டனர்.

செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், இதற்கான மதிப்பீட்டை தன்னிடம் தருமாறும் கேட்டுக் கொண்டார். அதன்படி உடனடியாகமதிப்பீடு அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

கைதடி சைவச் சிறுவர் இல்லம் மீளப்புனரமைப்பது பற்றிக் கலந்துரையாடப்பட்டது. இதுதற்போதைய சூழ்நிலையில் சாத்தியமாகாததால் மாற்று ஏற்பாடாக வேறோர் இடத்தில் இல்லம் ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

திருக்கேதிஸ்வரத்தில் இருந்து இராணுவத்தை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு பேரவையினர் விடுத்த கோரிக்கைக்கு அமைச்சர்இது நியாயமானது ஆனால் தற்போது கோயிலில் இராணுவம் இல்லை கோயிற் சூழலில் இராணுவம் இருக்கின்றது புலிகளும், இராணுவமும், இப்பிரதேசத்தில் ஒருபோதும் நிலை கொள்ளக் கூடாது இதற்கு சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் இந்து சமயபேரவை பகிரங்கமாக கோரவேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதற்குபேரவையினர் நாம் என்றும் ஆலயங்களில் ஆயுததாரிகள்யார் இருப்பதையும் ஒருபோதும் அனுமதிக்கவில்லைஎன்றும் அதனை என்றும் எதிர்க்கிறோம் என்று பதிலளித்தார் சிவராத்திரி தினத்திற்கு இந்துக்கள் அங்கு சென்று வழிபட ஏற்பாடு செய்துதருமாறு பேரவையினர் அமைச்சரை கோரினர் இதற்கு அமைச்சர் சாதகமாகவே செயற்படுவார் என்று பதிலளித்தார்

பேரவை சார்பில் பேரவை தலைவர் அருட்கவி.சீ வினாசித்தம்பி மற்றும் பேரவைத் கௌரவ செயலளார் சி.சக்திகிரிவன் இந்து சமய கலாசார இணைப்புசெயலாளர்திருமதி மகேஸ்வரிவேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(க)

## 'பிளாட்டூன்' வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் திரைபபடக் காட்சித் தொடரில், ''ஒலிவர் ஸ்ரோன்'' இன் ''பிளாட்டூன் ''எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறும்.

ஆர்வலர்கள் எவரும் கலந்து சொள்ளலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர். இரா. சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார் (ச)

## உள்ளூர் உ. கி உச்ச விலையில் விற்பனை

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணப் பகுதிகளில் விளையும் உள்ளூர் உருளைக் கிழங்குகள் உச்ச விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

சந்தைகளிலும் சில்லறையாகவும் ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கு ரூபா 90 முதல் 125 வரை விற்பனையாகின்றன.

கொழும்பிலிருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி இல்லாமையாலேயே உள்ளூர் உருளைக்கிழங்கிற்கு உச்ச விலை ஏற்பட்டுள்ளது என தெரியவருகுறது. ((-ச9ீ

## படிவங்கள் புதுப்பித்தல்

(கல்வியங்காடு)

இவ்வாண்டுக்கான குடும்பப் பதிவுப் படிவங்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கின்றவர்கள் அந்தந்தப் பகுதிக்குரிய கிராமசேவகரூடாகத் தொடர்புகொண்டு படிவத்தைப் புதுப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-54)

நேற்றைய வலம்புரியில் பொது அறிவு வினாக்கள் பகுதியில் வினா இல 38 ''ECM'' என அமைய வேண்டும்; தவறுதலாக EM என பிரசுரமாகியுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கிறோம்.

(ஆ-ர்)

## 71 பட்டதாரிகளுக்கு --...

எம். சுசீலா கொடிகாமம்
கே உமையாள் வட்டுக் கோட்டை
வி நிராஞ்சினி
கே கணேசராசா நீர்வேலி
எஸ் மனோரஞ்சிதமலர் வட்டுக்கோட்டை
கே.பிரஷா சுன்னாகம்
வி.சுதஞ்சனி கொக்குவில்
கே.ஜீவகலா யாழ்ப்பாணம்
கே பத்மசிறி உரும்பிராய்
கே.தவராசா சாவகச்சேரி
என்.சுதாமதி கொக்குவில் கிழக்கு
பி.மிதிலேஸ்வரி சங்கானை
எஸ். ரஜினி குளப்பிட்டி
பி பிரியதர்சினி பருத்தித்துறை
என்.சாமிலா சாவகச்சேரி
எஸ்.பீலிக்ஸ் மோகன் குமார் இளவாலை
என். நந்தரூபி மீசாலை
எஸ். ஜெயந்தி
என்.மதிரூபன் சுன்னாகம்
கே.கௌரிதேவி கொடிகாமம்
எஸ்.தேவா கல்வியங்காடு
கே.பாஸ்கரன் தாளையடி
கே.சித்திரா இணுவில் கிழக்கு
பி இன்பவதி உடுவில்
எஸ். விஜிதா மிருசுவில்
எம். செல்வசீலம் அல்வாய்
கே.ரவிகரன் நல்லூர்
கே. பஞ்சாச்சரலிங்கம் வரணி
கே.சாரதாதேவி திருநெல்வேலி
பி சண்முகராஜா உடுவில்
ஏ.சுதர்சன் திக்கம்
வி இந்துமதி புலோலி
எம் உதயகுமார் சாகச்சேரி
வி மதிவதனா சாவகச்சேரி
எல் திலகவதி யாழ்ப்பாணம்
ஏ யோன்கொலின் சாவகச்சேரி
எம். சரஸ்வதி யாழ்ப்பாணம்
வி.கஜேந்திரசர்னி சுண்டுக்குழி
கே.ரவீந்திரன் சுன்னாகம்
எஸ்.கல்யாணி யாழ்ப்பாணம்
கே தவசோதி கரவெட்டி
கே. கல்யாணசுந்தரி அல்வாய்
ரி.சுதர்சினி கரவெட்டி
கே கேதீசன் வட்டுக் கோட்டை
கே.கே சாந்தகுமார் அல்வாய் கிழக்கு
பி மகேஸ்வரன் யாழ்ப்பாணம்
ரி. தவசேகர் நல்லூர்
ஏ.கோகுலராஜன் புலோலி மேற்கு பருத்தித்துறை
ஜெ தமயந்தி கரவெட்டி
பி.உதயராஜன் கரவெட்டி
பி.ராஜகுமார் வெள்ளவத்தை கொழும்பு
ரி. பிரபாகரன் யாழ்ப்பாணம்
இ ஜெயறூபி புலோலி
எஸ் சுபலிங்கம் பருத்தித்துறை
கே அற்புதமலர் உடுப்பிட்டி
எஸ் உதயகுமார் திருநெல்வேலி,கிழக்கு
சி.சதீஸ்வரன் திருநெல்வேலி
எம் கோபிகிருஷ்ணா சுழிபுரம்
எஸ்.யோகமலர் யாழ் பல்கலைக்கழக விடுதி
ஏ.ராஜரவீந்திரன் பருத்தித்துறை
எம் வரப்பிரசாத் யாழ்ப்பாணம்
என். அம்பிகைபாகன் வட்டுக்கோட்டை
என். கிருபகரன் யாழ்ப்பாணம்
ரி. பி. செல்வக்குமார் மீசாலை
எம். ஜெயலிங்கம் சாவகச்சேரி
லெஸ்லி குணரத்தினம் மானிப்பாய்
கே. ரவீந்திரன் பளை
எஸ் சாந்தினிதேவி யாழ்ப்பாணம்
ரி. லெஸ்லி பருத்தித்துறை
கே. சுதர்ஷி அல்வாய்
விஜிதா சிவராசா உடுவில்

# இலங்கை மக்களின் சார்பில்

# எரிக்சோலிடம் மன்னிப்பு கேட்கிறேன்

## பாராளுமன்றில் ஆனந்தசங்கரி

(கொழும்பு)
இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை காண்பதற்காக இலங்கை அரசுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடுநிலைஏற்பாட்டாளராக இருந்து செயற்படும் எரிகசோல் ஹெய்ம் இலங்கை அரசின் அழைப்பின் பேரிலேயே இங்கு வந்தார் அத்தகையதொரு சமாதான தூதுவரை தனிப்பட்ட வாழ்க்கையோடு இணைத்து இளிவாகபேசியமைக்கு இந்த நட்டுமக்களின் சார்பாக நான் அவரிடம் மன்னிப்பு கோருகிறேன்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி பாராளுமன்றத்தில் தெரிவித்துளளார்.



அவசரகால சட்டம்மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக்கருணாரட்ண தூதுவரை இழிவாகப் பேசியமை தொடர்பாகவே ஆனந்தசங்கரி மன்னிப்பு கோரியிருந்தார்.

### ஓடும்---

அண்மையில் இடம் பெற்ற யுத்தம்காரணமாக அப் பகுதியில் வைத்தியசாலை இயங்காமையினால் அங்குள்ள மக்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குவரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (வ-23)

### அரச

யிட்ட செய்திக் குறிப்பில் மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது அரசாங்கம்உடனடியாக யுத்த நிறுத்தம் செய்து மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன்பேச்சுவார்த்தையில்ஈடுபட வேண்டும்மனவும் தமிழ் மக்களின்சுய நிர்ணய உரிமைகள் அங்கீகரிக்கப் பட்ட தீர்வொன்றையே நாம் விரும்புவதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

### அமெரிக்க

நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற யுத்தத்தை, யுத்தத்தின் மூலமே முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

தமிழ்மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது எனக் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்என்றார்.

இதேவேளை தமிழர்களும் சிங்களவர்களும் சமாதானமாக வாழ்வதற்கு பேச்சுவார்த்தைமூலம்தீர்வு காணப்படுவதே மிகவும் அத்தியாவசியமான தேவை என்று அமெரிக்க தூதுவர் அஸ்லிவில் தெரிவித்தார். (இ)

### புலிகளை

தென்மராட்சியின் முக்கியமான சில பகுதிகளிலிருந்து புலிகள் பின்வாங்கியமை தந்திரோபாயமான நடவடிக்கையாகும்.

ஆனால் விடுதலைப் புலிகளின் அமைதி சமாதானத்தில் கரிசனையுள்ளவர்களாக இருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்துளார். [வ]

### துன்னாலை---

கணபதி அரசன் [வயது-48] என்பவர் முழங்கால் துண்டிக்கப்பட்ட நிலையிலும் மற்றும் பரமேஸ்வரன் பவீதன்வயது3 செல்லன் பவளம் [வயது-65] ஆகியோர் சிறுகாயங்களுடனும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 6.30 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

துன்னாலைப் பகுதியில் வீட்டுடன் இருந்த கடையை தட்டியைத்துக்கிவிட்டு கடைக்குள் நுளையமுற்பட்ட போதுமிதிவெடி ஒன்று வெடித்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

இச்சம்பவம் தொடார்பாக நெல்லியடிப் பொலிஸார் புலன் விசாரணைகயை மேற்கொண்டுள்ளனர். (வ-23)

### புலிகளின்---

ளார்.

தமிழ் தலைவர்கள் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரமாநாயக்கா, ஜனாதிபதி சந்திரிகா, சபாநாயகர் அனுராபண்டாரநாயக்கா ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்அவர்களின்கருத்துக்களை உள்ளடக்கிய முக்கிய அம்சங்களை தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் எடுத்துச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஜனாதிபதி சந்திரிகாவின் முக்கிய யோசனைகள் அடங்கிய கருத்துக்களை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திடம் எடுத்துக் கூறுவதுடன், மீண்டும் இரண்டுவாரகால இடைவெளிக்குள் எரிக்சோல் இலங்கை வரவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

ஜனாதிபதியின் முக்கிய கோரிக்கைகள் அடங்கிய தீர்வுப் பொதி எந்தளவுக்கு புலிகளின் ஆலோசகரினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அந்தளவுக்கு சமாதானப் பேச்சிற்குகந்த சூழல் தென்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் யுத்த நிறுத்தம் முடிவுறுவதற்கு முன்னதாக இரு வார காலத்திற்குள் இலங்கை வரும் நோர்வேயின் தூதுவர் வன்னியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேரில் சந்தித்தும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக பேசவுள்ளார் என்றும் நோர்வே தூதரகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### பயணிகள்கப்பல் இன்றுபுறப்படும்

[யாழ்ப்பாணம்]
லங்காமுடித்த கப்பல் இன்றுபுறப்படுமென அறிவிக்கப்பட்டுளளது இக்கப்பலில் பயணம்செய்யவுள்ளோரை பயணஆயத்தங்களுடன் இன்றுகாலை 6மணிக்கு ஸ்ரான்லிவீதியில் அமைந்துள்ள மணியம்கட்டடத்திற்கு வருகைதருமாறும் கேட்கப்பட்டுள்ளது இக்கப்பலில்ஆயிரத்து250பயணிகள் புறப்படுவர் (ந)

### 14 சபைகளின்

களுக்காள தேர்தலை ஜனாதிபதி பின் போட்டுள்ளார். இதனை எதிர்த்து நீதிமன்றம் செல்ல முடியும் இது பற்றி அமைச்சர் விளக்கமளிக்க வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் மகிந்த சமரசிங்க ரத்வத்தையிடம் கேள்வி எழுப்பினார் இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை கரச்சி மன்னார், பூநகரி, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, வவுனியா வடக்கு வெங்கலச் செட்டிக்குளம், வவுனியா தெற்கு (தமிழ்/சிங்களம்), மாந்தை கிழக்கு துணுக்காய், புதுக்குடியிருப்பு கடலோரப்பற்று ஆகிய பிரதேச சபைகளின் தேர்தலை ஏன் பின் போடுகின்றீர்கள் இதற்குரிய காரணத்தை தெரிவிக்க வேண்டுமென்றே மகிந்த சமரசிங்க பாராளுமன்றில் கேள்வி எழுப்பினார்

இது இவ்வாறிருக்க மேற்படி பிரதேசசபைகள் அடங்கியுள்ள பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (இ)

### யுத்தத்தை

யாழ்ப்பாண கத்தோலிக்க மறைமாவட்ட நீதி-சமாதான ஆணைக்குழுவும் யாழ் மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் தமதுமுழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளன.

சமாதானத்துக்கான சூழல் கனிந்துள்ள இவ் வேளையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க யுத்தத்தை நிறுத்துமாறும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளுமாறும் அரசாங்கத்தை கோருவதில் எந்தவித தவறும் இல்லை என மேற்படி அமைப்புக்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பனும் எமது நிறுவனத்தின் வாடிக்கையாளருமான.
கரசன் எலக்றிக்கல் உரிமையாளர்
திரு:- T.T சிவதாசனின் அன்புத்தந்தையார்
திரு:- T. திருநாவுக்கரசு
அவர்களின்
மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்

N. பாலா T. ஜீவா
ருவிங்கிள்ஸ்ரார் நிறுவனம்.
அமுல் நிறுவனம்
(கி/1323)


## பிரிவுத்துயர் பகிர்வு

### ஐயம்பிள்ளை கோபாலசிங்கம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும்கொண்ட ஐயம் பிள்ளை கோபாலசிங்கம் 10-1-20001 அன்று டோகாவில் அகாலமரணமடைந்து விட்டார்.

இறுதிக்கிரியைகள் குருமன் காடு வவுனியாவில் நடைபெறும்.

தகவல்- சோ. சிவனேஸ்வரன்
(மைத்துனர்)

### அப்புக்குட்டி ஐயாத்துரை

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியைவசிப்பிடமாகவும் கொண்ட அப்புகுட்டி ஐயாத்துரை 11ம் திகதி காலமானார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடை பெற்றன.

தகவல்- சுரேஷ்
[மகன்]

### தம்பிஐயா தங்கராசா

(முன்னாள் இ.போ.ச சாரதி)
யாழ் கச்சேரியடியைப்பிறப்பிடமாகவும், பொன்னம்பலம் வீதி அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா தங்கராசா கடந்த வருடம் வைகாசிமாதம் அகால மரணமடைந்து விட்டார்.

தகவல்- த.சுரேஷ்
(மகன்)

### திருமதி மார்க்கண்டு கமலாம்பிகை

காரை நகர் வலந்தலையைவசிப்பிடமாகக்கொண்ட மார்க்கண்டு கமலாம்பிகை 11-1-2001 அன்று காலமானர்.

இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்-சி.தவமணிதேவி
[மகள்]

### திருமதி வைரமுத்து இராசம்மா

நாயன்மார்கட்டு பாரதி வீதியைச் சேர்ந்த வைரமுத்து இராசம்மா சாரராள்) 10 ஆம் திகதி கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று நல்லடக்கம் செய்யப் பட்டது.

தகவல்-சி.கந்தசாமி
[மருமகன்]


## ஸ்ரீசெல்வா

(யாழ்ப்பாணம்)
பிரபு, வைஜெந்தி, வடிவேலு
நடித்த
வண்ணத்தமிழ்
பாட்டு
(வெட்டுப்படாத முழுமையான படம்)
10-30, 2-30 (ப. நே)
நாளை
சிவாஜியின்
மகாகவி
காளிதாஸ்
(2-15) (கி/688)

## நாகம்ஸ்

டைட்டானிக் என்ற கப்பலில் நடந்த பயங்கரமான உண்மைச்சம்பவத்துடன் சுவாரசியமான காதல் கதையும் பிணைக்கப்பட்டு உலகு எங்கும் எதிரொலிக்கும்
டைட்டானிக்
(தமிழ் - ரீல்ஸ்)
காட்சி நேரங்களில்
மாற்றம்
10-30, 2-30 பு. நேரம்
(கி-713)

## மிற்சுயி(MITSUI) அட்லஸ்(ATLAS) சீமெந்து விற்பனை

இவ் ஆண்டின் (2001) உற்பத்தி செய்யப்பட்ட மிற்சுயி (Mitsui), அட்லஸ் (Atlas) சீமெந்துகள் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது.

புதிய மொத்த விலை:

மிற்சுயி (MITSUI) - 525ரூ.
அட்லஸ் (ATLAS) - 500ரூ.

டோக்கியோ சீமெந்து கம்பனியின் மிற்சுயி (Mitsui), அட்லஸ் (Atlas) சீமெந்துகள் சர்வதேச அங்கீகாரம் (ISO14001) பெற்றதுடன் இலங்கை தர நிர்ணய சபையினால் அங்கீகரிக்கப்பட்டு (SLS) முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது.

தொடர்பு:
ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T-P- 2407 FAX- 2140
(கி-1322)


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல. 11 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.